(அ) இராமநாதபுரம் மாவட்டம், இராசசிங்கமங்கலம் கண்மாய்க்குக் குறுக்கே பாலம் அமைத்து செங்குடி வழியாய் வண்டல் வரை சாலை அமைக்கும் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நிதி நிலையைப் பொறுத்து அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்வதுபற்றி முடிவு செய்யப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இராசசிங்கமங்கலம் கண்மாய் பொறுத்தவரையிலே, அது வெகு முக்கியமானதாகி விட்டதே, இடையிலே தண்ணீர் வருவதற்குரிய திட்டங்கள் எல்லாம் இருக்கின்றனவே, அவற்றையும் பாலம் திட்டத்தோடு சேர்த்து, வேலைகள் நடைபெற ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இரண்டையும் சேர்த்துத்தான் ரூ. 20 இலட்சம் செலவாகும் என்று தெரிவிக்கப்பட்டது. நிதிநிலை சரியானபிறகு, அது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படுவதுபற்றிப் பரிசிலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Development Scheme for Adayar river

* 12 Q.—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to beautify the backwaters of River Adayar in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) இத்தகைய செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆயினும், சென்னை மாநகர எல்லைக்குள் அடையாற்றின் கரைகளை அழகு படுத்துவதற்கான செயற்குறிப்புகளை வகுப்பதற்குரிய ஆய்வுப் பணியைப் பொதுப்பணித்துறை மேற்கொண்டுள்ளது.

1974 சனவரி 19]

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, அடையாறு உப்பங்கழிப் பகுதியை, உடனடியாக அழகுபடுத்த, அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்கு தனியாக ஒன்றும் இல்லை. ஆனால், அடையாற்றின் கரைகளை அழகு படுத்தும் செயற்குறிப்பை மேற்கொள்ள ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தேன். அந்த ஆய்வு முடிந்த பிறகுதான் நடவடிக்கை எடுக்கப்படும்.

New Fertilizer Factories

* 13 *Q.* THIRU N. DENNIS :

THIRU N. K. PALANISWAMY : Will the Hon. **the** Minister for Industries be pleased to state :

(*a*) whether any new Fertilizer Factories are to be started in (i) public, (ii) private and (iii) Joint Sector in this State;

(*b*) if so, whether any report has been prepared in this connection; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தூத்துக்குடியில் உரத் தொழிற்சாலையை நிறுவிக்கொண்டிருக்கும் கூட்டுத் துறை நிறுவனமான சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பொரேஷன் லிமிடெட், ரூ. 140 கோடி செலவில் இரண்டாவது உரத் தொழிற் சாலையைக் கடலூரில் அமைக்க இசைவுக் கடிதம் கோரி மத்திய அரசுக்கு ஜூலை 1973-ல் மனு செய்திருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: அவைகளிலிருந்து கிடைக்கும் மொத்த உர உற்பத்தியின் அளவு எவ்வளவாக இருக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதுள்ள தொழிற் சாலைகளினுடைய கப்பாசிட்டி, அம்மோனியா 1,100 டன், யூரியா 1,600 டன், டிஎபி/என்பிகே 600 டன், சல்ஃபரிக் ஆசிட் 470 டன், பாஸ்ஃபரிக் ஆசிட் 165 டன்.

திரு. என். கே. பழனிசாமி: சார், மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் வந்தன? அவைகளில் எத்தனைக்கு லெட்டர் ஆப் இன்டென்ட் மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது?